ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருப்பரமேச்சுர விண்ணகரம்


*This document has been prepared by*

*Sunder Kidāmbi*


*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருப்பரமேச்சுர விண்ணகரம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
    வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
    ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
    ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
    ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ 5 ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
    ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।

ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஶ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆

வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆
படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆

தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆

பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆

பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரிய திருமொழி – சொல்லுவன்

‡ சொல்லுவன் சொற்பொருள் தான் அவையாய்ச் ⋆
சுவை ஊறொலி நாற்றமும் தோற்றமுமாய் ⋆
நல் அரன் நாரணன் நான்முகனுக்கிடந்தான் ⋆
தடம் சூழ்ந்தழகாய கச்சி ⋆
பல்லவன் வில்லவன் என்றுலகில் ⋆
பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழல் பல்லவன் ⋆
மல்லையர் கோன் பணிந்த ⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே ‖ **2.9.1** ‖

கார் மன்னு நீள் விசும்பும் ⋆
கடலும் சுடரும் நிலனும் மலையும் ⋆
தன் உந்தித் தார் மன்னு தாமரைக் கண்ணன் இடம் ⋆
தட மா மதிள் சூழ்ந்தழகாய கச்சி ⋆
தேர் மன்னு தென்னவனை முனையில் செருவில் ⋆
திறல் வாட்டிய திண் சிலையோன் ⋆

பார் மன்னு பல்லவர் கோன் பணிந்த ⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே ‖ **2.9.2** ‖

உரம் தரு மெல் அணைப் பள்ளி கொண்டான் ⋆
ஒரு கால் முன்னம் மா உருவாய்க் கடலுள் ⋆
வரம் தரு மா மணிவண்ணன் இடம் ⋆
மணி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி ⋆
நிரந்தவர் மண்ணையில் புண் நுகர் வேல் ⋆
நெடு வாயில் உகச் செருவில் முன நாள் ⋆
பரந்தவன் பல்லவர் கோன் பணிந்த ⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே ‖ **2.9.3** ‖

அண்டமும் எண் திசையும் நிலனும் ⋆
அலை நீரொடு வான் எரி கால் முதலா உண்டவன் ⋆
எந்தை பிரானதிடம் ⋆
ஒளி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி ⋆
விண்டவர் இண்டைக் குழாமுடனே ⋆
விரைந்தார் இரியச் செருவில் முனிந்து ⋆
பண்டொரு கால் வளைத்தான் பணிந்த ⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே ‖ **2.9.4** ‖

தூம்புடைத் திண் கை வன் தாள் களிற்றின் ⋆
துயர் தீர்த்தரவம் வெருவ ⋆
முன நாள் பூம் புனல் பொய்கை புக்கான் அவனுக்கிடம் தான் ⋆
தடம் சூழ்ந்தழகாய கச்சி ⋆
தேம் பொழில் குன்றெயில் தென்னவனைத் ⋆
திசைப்பச் செருமேல் வியந்தன்று சென்ற ⋆

பாம்புடைப் பல்லவர் கோன் பணிந்த ⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே ॥ **2.9.5** ॥

திண் படைக் கோள் அரியின் உருவாய் ⋆
திறலோன் அகலம் செருவில் முன நாள் ⋆
புண் படப் போழ்ந்த பிரானதிடம் ⋆
பொரு மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி ⋆
வெண் குடை நீழல் செங்கோல் நடப்ப ⋆
விடை வெல் கொடி வேல் படை முன் உயர்த்த ⋆
பண்புடைப் பல்லவர் கோன் பணிந்த ⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே ॥ **2.9.6** ॥

இலகிய நீள் முடி மாவலி தன் பெரு வேள்வியில் ⋆
மாண் உருவாய் முன நாள் ⋆
சலமொடு மா நிலம் கொண்டவனுக்கிடந்தான் ⋆
தடம் சூழ்ந்தழகாய கச்சி ⋆
உலகுடை மன்னவன் தென்னவனை ⋆
கன்னி மா மதிள் சூழ் கருவூர் வெருவ ⋆
பல படை சாய வென்றான் பணிந்த ⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே ॥ **2.9.7** ॥

குடைத் திறல் மன்னவனாய் ⋆
ஒரு கால் குரங்கைப் படையா ⋆
மலையால் கடலை அடைத்தவன் எந்தை பிரானதிடம் ⋆
மணி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி ⋆
விடைத் திறல் வில்லவன் நென்மெலியில் ⋆
வெருவச் செரு வேல் வலங்கைப் பிடித்த ⋆

படைத் திறல் பல்லவர் கோன் பணிந்த ⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே ॥ **2.9.8** ॥

பிறை உடை வாணுதல் பின்னை திறத்து ⋆
முன்னே ஒரு கால் செருவில் உருமின் ⋆
மறை உடை மால் விடை ஏழ் அடர்த்தாற்கிடந்தான் ⋆
தடம் சூழ்ந்தழகாய கச்சி ⋆
கறை உடை வாள் மற மன்னர் கெட ⋆
கடல் போல் முழங்கும் குரல் கடுவாய் ⋆
பறை உடைப் பல்லவர் கோன் பணிந்த ⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே ॥ **2.9.9** ॥

‡ பார் மன்னு தொல் புகழ்ப் பல்லவர் கோன் பணிந்த ⋆
பரமேச்சுர விண்ணகர் மேல் ⋆
கார் மன்னு நீள் வயல் மங்கையர் தம் தலைவன் ⋆
கலிகன்றி குன்றாதுரைத்த ⋆
சீர் மன்னு செந்தமிழ் மாலை வல்லார் ⋆
திரு மா மகள் தன் அருளால் ⋆
உலகில் தேர் மன்னராய் ஒலி மா கடல் சூழ் ⋆
செழு நீர் உலகாண்டு திகழ்வர்களே ॥ **2.9.10** ॥

**திரு வைகுந்தவல்லி சமேத பரமபதநாதன் திருவடிகளே சரணம்**